Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

புதன்கிழமை 02, ஓகஸ்ட் 2023 | ஒளி: 09 கதிர்: 053 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# கோழி இறைச்சி விலை குறைப்பு

ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவினால் குறைக்க உள்ளூர் உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்தது.

அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் கோழிப்பண்ணை சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டது.

# மகாவலி எதிர்ப்புக்கு பாகுபாடே காரணம்

**சண்முகம் தவசீலன்**

மகாவலியால் தமிழ் மக்களுக்கு 2 ஏக்கரும் சிங்கள மக்களுக்கு 25 ஏக்கரும் வழங்கப்படுவதாக கூறுவதாகவும் தமிழ் மக்கள் மகாவலி என்பதை எதிர்த்து நிற்பதற்கு பாகுபாடான செயற்பாடே காரணம் என்று கமக்கார அமைப்பு குற்றச்சாட்டியுள்ளது.

கொக்குத்தொடுவாய் அக்கரவெளி பகுதியிலுள்ள மணல்கேணி , சுதியோடை போன்ற தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை சுத்தம் செய்வதற்காக பார்வையிட சென்ற போது ஒரு பகுதி துப்புரவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரையும் அழைத்து அங்கே சென்ற போது கொழும்பிலே உள்ள முதலாளிமாரால் துப்பரவு செய்யப்பட்டதாக தங்களுக்கு கூறப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

11 நபர்களுக்கு 25 ஏக்கர் வீதம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வன இலாகா உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் கூறினர்.

தொடர்ச்சி P2





# 13 குறித்து ஜனாதிபதி விசேட அறிவிப்பு

### 13ஐ அமலாக்க தமிழ்க் கட்சிகளின் மாறுபட்ட கருத்துகள் இடையூறு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலும் அதனை பலப்படுத்துவது தொடர்பில் சகல யோசனைகளையும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதனடிப்படையில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் அதிகாரத்தை பகிர்வது தொடர்பில், அடுத்தவார பாராளுமன்ற கூட்டத்தில் ஜனாதிபதி விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றவுள்ளார்.

தொடர்ச்சி P2



# இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை

### இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே தெரிவிப்பு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி இலங்கையில் தமிழ் மக்களை கௌரவமாக வாழ வைப்பதற்கும், மாகாண சபைத் தேர்தலை நடத்தும் இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றம் இல்லை என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பிறந்தநாள் வீட்டுக்கு தீ வைத்த 5 பேர் சிக்கினர்


வவுனியா - தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, வீட்டிற்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மெதவெத்தியகுளம், சிவபுரம், பாம்பேமடுவ மற்றும் நெலக்குளம் ஆகிய பகுதிகளில் வைத்து திங்கட்கிழமை (31) மாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதாகியுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 24, 27, 31 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

தொடர்ச்சி P2



மருந்து கொள்வனவுக்காக

# 2 பில்லியன் ரூபாயை கோருவதற்கு திட்டம்

200 வகையான அத்தியாவசிய மருந்துகளை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு தேவையான 2 பில்லியன் ரூபாயை விடுவிப்பதற்கு நிதியமைச்சிடம் கோரிக்கை விடுப்பதற்கு சுகாதார அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள விலைமனுக் கோரல் நடைமுறைகளின் கீழ் இந்த மருந்துகளை கொள்வனவு செய்வற்கு குறைந்தது நான்கரை மாதங்களாகும் என்று மருந்துகளை கொள்வனவு செய்யும் முகவர் நிறுவனங்கள் தெரிவித்துள்ள அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# முத்துராஜவெல முனையத்தில் 40 பவுசர்கள் தடுத்து வைத்தனர்

### பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முத்துராஜவெல முனையத்தில் இருந்து முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் ஏற்றப்பட்ட சுமார் 40 பவுசர்கள், திங்கட்கிழமை (31) பிற்பகல் தடுத்து வைக்கப்பட்டதாகவும், அன்றிரவு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஏறக்குறைய 3 இலட்சம் லீற்றர் எரிபொருள் அந்த எரிபொருள் களஞ்சியசாலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த எரிபொருளுக்கான அதிகரிக்கப்பட்ட விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2




# தேசிய கீதத்தை ரீமிக்ஸ் செய்து பாட முடியாது

### அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அறிவிப்பு

தேசிய கீதத்தை ரீமிக்ஸ் செய்யவோ அல்லது ரப் இசையாக பாடவோ முடியாது என்று புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் ஆரம்ப விழாவின் போது தேசிய கீதம் முறையின்றி பாடப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய கீதத்தை பாடுவதற்கு ஒரு நிலையான வழி இருப்பதாகவும் அது நாட்டின் அடையாளத்தையும் கலாச்சாரத்தையும் பிரதிநிதித்து வப்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டினார்.



ஒரு நாட்டின் தேசிய கீதத்தை எவராலும் சிதைக்க முடியாது எனவும், எனவே சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சு பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# தமுகூ–கோபால் பாக்லே வெள்ளியன்று சந்திப்பு

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கும் இடையில், ஓகஸ்ட் 4ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பு இடம்பெற உள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரின் அழைப்பை ஏற்று நிகழும் இச்சந்திப்பில் தமுகூவின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என தமுகூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பெற்றோல் விலை அதிகரிப்பால்

# பொதுப் போக்குவரத்துக்கு பொதுமக்கள் தள்ளப்படுவர்

பெற்றோல் விலை அதிகரிப்பின் காரணமாக பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவதற்கு அதிகமான பொதுமக்கள் தள்ளப்படுவர் என்று என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2







# சிறைக் கைதிகளுக்கு சின்னமை நோய்

**க. அகரன்**

சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளமையால் வவுனியா சிறைச்சாலை 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், கைதிகளை உறவினர்கள் பார்வையிடுவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலருக்கு சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளமை கடந்தவாரம் கண்டறியப்பட்டது.

தொடர்ச்சி P2

# 120 பேருடன் பயணித்த பஸ் பள்ளத்தில் பாய்ந்து விபத்து

தொடர்ச்சி

# அழகான பெண்களிடம் பாலியல் சேஷ்டை: விசாரணைக்கு பெண் எம்.பி கோரிக்கை

பாராளுமன்றத்தின் உணவு வழங்கல் மற்றும் பாராமரிப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த சில பிரதானிகள் உட்பட சில அதிகாரிகளின் அழகான பெண்களுக்கு எதிராக மேற்கொண்டதாகக் கூறப்படும் அங்க சேஷ்டைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் பாராளுமன்ற உறுப்பினர் மன்றத்தின் தலைவி கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே பாராளுமன்ற பொதுச் செயலாளர் திருமதி குஷானி ரோஹனதீரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



# எரிபொருள் விலைகள் கூடிக் குறைந்தன

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்களால் திங்கட்கிழமை (31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் திருத்தப்பட்டன.

ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோல் 20 ரூபாயாலும் ஒரு லீற்றர் 95 ஒக்டேன் பெற்றோல் 10 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டதுடன், ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் 2 ரூபாயால் குறைக்கப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மகாவலி எதிர்ப்புக்கு பாகுபாடே காரணம்

எங்களுடைய காணிகளை துப்பரவு செய்ய முடியாமல் அங்குமிங்குமாக அலைந்து திரியும் நிலையில் இவ்வாறு தொகையான காணிகள் மகாவலி என்ற பெயரில் வழங்கப்படுவதென்பது கிராம மக்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முன்னாள் எம்.பிக்கள் அடங்கிய குழுவினருக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான வசந்திபொன்று இந்திய இல்லத்தில், செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் சர்வகட்சி மாநாடொன்றை நடத்தினார். அதில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபை விவகாரங்கள் தொடர்பில் வெகுவாக ஆராயப்பட்டன.

இந்நிலையிலேயே மேற்படி சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை உயர்ஸ்தானிகர் தெரிவித்ததுடன், முக்கியமான விவகாரங்கள் தொடர்பில் இருதரப்பினராலும் ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், கோவிந்தம் கருணாகரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் மற்றும் முன்னாள் எம்.பியான மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

## பிறந்தநாள் வீட்டுக்கு தீ வைத்த 5 பேர் சிக்கினர்

கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி பிறந்தநாள் விழா நடைபெற்ற வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தால் அங்கிருந்தவர்களை தாக்கி வீட்டுக்கு தீவைத்துள்ளனர்.

இதன்போது 10 பேர் தீக்காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இளம் தம்பதினர் உயிரிழந்தனர்.

02 வயதுடைய ஆண் குழந்தையும், 07 வயது மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுமிகள், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட 04 பெண்களும், 42 வயதுடைய ஆண் ஒருவரும் வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முகமூடி அணிந்த குழுவொன்று வீட்டுக்கு தீ வைப்பதும் குடியிருப்பாளர்களைத் தாக்குவதுமான சிசிடிவி காட்சிகள் பொலிஸாருக்கு கிடைத்ததுடன், விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 13 குறித்து ஜனாதிபதி விசேட அறிவிப்பு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்குத் தேவையான இணை சட்டமூலங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி தெளிவுபடுத்துவார். பொலிஸ் அதிகாரத்தை தவிர, ஏனைய அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பது தொடர்பிலும் ஜனாதிபதி தெளிவுபடுத்துவார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை செயற்படுத்த ஜனாதிபதி முயலும் போது, பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் ஒரே கருத்தொருமையில் இல்லாமை ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கின்றது என்று ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்து ஆலோசிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்த சர்வகட்சி மாநாடு நிறைவடைந்து இரண்டு வாரங்களுக்கு பின்னர் இந்த விடயம் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 பில்லியன் ரூபாயை கோருவதற்கு திட்டம்

இருப்பினும், இந்த விவகாரத்தின் அவசரத்தை கருத்தில் கொண்டு இது சாத்தியமில்லை என்றும் அவசரகால கொள்வனவின் கீழ் மருந்து தொகுதிகள் பெறப்பட்டிருந்தால், ஒன்றரை மாதங்களில் மருந்து தொகுதிகள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களின் குறைபாடுகள் காரணமாவே மருந்துப் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், எந்தெந்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் குறைவாக உள்ளன என்பதைக் கணக்கிடுவது அதிகாரிகளுக்குக் கடினமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தேசிய கீதத்தை ரீமிக்ஸ் செய்து பாட முடியாது

ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் ஆரம்ப விழாவின் போது தேசிய கீதத்தின் வார்த்தைகளை பாடகியொருவர் தவறாக உச்சரித்தமை குறித்து சமூகஊடகங்களில்வீடியோ பரவியது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு திங்கட்கிழமை (31) அறிவித்தது.

## சிறைக் கைதிகளுக்கு சின்னமை நோய்

இதேவேளை, சின்னம்மை நோய்பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அத்துடன் விளக்கமறியலில் உள்ள கைதிகளின் நீதிமன்ற தவணைகளுக்கு புதிய திகதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சில வழக்குகள் நிகழ்நிலை தொழில்நுட்ப உதவியுடன் இடம்பெற்றுவருகின்றது.

இதேவேளை, வவுனியா சிறைச்சாலையில் இடவசதி பற்றாக்குறை நீண்டகாலமாக உள்ளதுடன் அளவுக்கதிகமான கைதிகள் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முத்துராஜவெல முனையத்தில் 40 பவுசர்கள் தடுத்து வைத்தனர்

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருளை முன்பதிவு செய்யவில்லை என எரிசக்தி அமைச்சர் குற்றம் சுமத்திய பின்னணியில், இவ்வாறு பணம் செலுத்திய முன்பதிவு செய்யப்பட்ட நிலையில், அதனை தடுத்து வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து முத்துராஜவெல முனையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, அதிகாலை வேலையிலேயே தான் வெளியேறியதால் இந்த சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்று கூறினார்.

## பொதுப் போக்குவரத்துக்கு பொதுமக்கள் தள்ளப்படுவர்

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

திங்கள் (31) நள்ளிரவு முதல் பெற்றோல் விலை அதிகரித்ததன் காரணமாக மாற்று வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு மக்கள் ஊக்குவிக்கப்படுவர் என்றும் இது தனியார் பஸ்கள் மக்களுக்கு போக்குவரத்தை வழங்க உதவும் என்றும் குறிப்பிட்டார்.

அதிகமான பொதுமக்கள் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்படுவர் என்றும் இது மறைமுகமாக தனியார் பஸ் தொழிற்துறைக்கு நன்மை பயக்கும் எனவும் தெரிவித்தார்.

லங்கா ஒட்டோ டீசல் 1 லீற்றரின் விலை 15 முதல் 25 ரூபாயால் குறைப்பட்டால் மாத்திரமே பஸ்கட்டணம் குறைக்கப்படும் என்று தெரிவித்த அவர், டீசல் விலை 2 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளமையால் பயணிகளுக்கு இந்த நிவாரணம் வழங்க வாய்ப்பில்லை என்றார்.

பஸ் கட்டணங்கள் தொடர்பான தேசிய கொள்கையின்படி பஸ் கட்டணத்தை கணக்கிடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

# 2ஆவது தொகுதி இன்று வருகிறது

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக்கின் முதல் எரிபொருள் தொகுதி செவ்வாய்க்கிழமை (01) தரையிறக்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாவது எரிபொருள் தொகுதி இன்றையதினம் (02) நாட்டை வந்தடையும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கையின் எரிபொருள் சந்தையில் புதிய விநியோகஸ்தர்கள் நுழைவதன் மூலம் பெற்றோலியப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணி தேவைகள் எளிதாக்கப்படும் என்று அமைச்சர், செவ்வாய்க்கிழமை (01) குறிப்பிட்டார். எரிபொருள் நிலைய விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இறுதி செய்யப்பட்டவுடன் சினோபெக் நாடளாவிய ரீதியில் 150 எரிபொருள் நிலையங்களுடன் சில்லறை பெற்றோலிய செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும்தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்காத வகையில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு இந்த முக்கிய நடவடிக்கையை எடுத்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகியவை கடந்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு போதுமான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் சவாலை எதிர்கொண்டன. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு பல்வேறு உத்திகள் குறித்து ஆராய்ந்ததுடன், எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற பெற்றோலிய நிறுவனங்களிடமிருந்து இலங்கைக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராய்ந்தது.

இலங்கை சந்தையில் நுழையும் புதிய சில்லறை விநியோகஸ்தர்களுக்கான முக்கிய நிபந்தனைகளில் , உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச் செலாவணித் தேவைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பது பிரதானமானதாகும்.

இதற்கான அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்டன.

## எரிபொருள் விலைகள் கூடிக் குறைந்தன

ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 12 ரூபாய் அதிகரிக்கப்பட்ட அதேவேளை, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 10 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாக நிறுவனங்கள் அறித்துள்ளன.

# 120 பேருடன் பயணித்த பஸ் பள்ளத்தில் பாய்ந்து விபத்து

### 18 பேர் காயம்: சாரதி, நடத்துனர் கைது

ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியின் 63 ஆம் மைல்கல் அமைந்துள்ள வட்டவளை சிங்கள பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் செவ்வாய்க்கிழமை (01) அதிகாலை 04.40 மணியளவில் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 18 பேர் காயமடைந்துள்ளனர் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். சாரதி மற்றும் நடத்துனருக்கு சிறுசிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.



கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த நுவரெலியா இ.போ.ச டிப்போவுக்கு சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளானது. அந்த பஸ் கொழும்பில் இருந்து நள்ளிரவு 12.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து காலை 6 மணிக்கு நுவரெலியாவை சென்றடையவிருந்தது.

காயமடைந்த 18 பயணிகள் வட்டவளை அரச மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களுக்கு எலும்பு முறிவுகள், காயங்கள் மற்றும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வட்டவளை வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார்.



## தையிட்டி விகாரையை எதிர்த்து 2ஆவது நாளாகவும் போராட்டம்

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான 6ஆவது கட்ட போராட்டம் திங்கட்கிழமை (31) ஆரம்பமாகிய நிலையில் செவ்வாய்க்கிழமையும் (01) இரண்டாவது நாளாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்ட களத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அடாத்தாக அபகரித்த மக்களது காணிகளில், அனுமதியின்றி இந்த விகாரை அமைக்கப்பட்ட நிலையில் மக்களது நிலங்களை மீள வழங்குமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அழகான பெண்களிடம் பாலியல் சேஷ்டை: விசாரணைக்கு பெண் எம்.பி கோரிக்கை

இது தொடர்பில் நாம் பாராளுமன்ற பொதுச் செயலாளரிடம் கேட்ட போது, விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டதுடன், இந்த சம்பவத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தின் பராமரிப்புப் பிரிவில் இளம் பெண்கள் குழு ஒன்று, சில தலைவர்களால் துன்புறுத்தப்படுவதாகவும் பாராளுமன்றத் தலைவர்களிடம் முறையிட்டனர்.

குறிப்பிட்ட சில மேலதிகாரிகளாலும் அதிகாரிகளாலும் பலவிதமான வன்முறைகளுக்கு ஆளாகியுள்ளதாகவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இனங்காத பட்சத்தில் பல்வேறு வகையான பழிவாங்கல்களுக்கு உள்ளாக நேரிடுவதாகவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் நீதி கோரி வரும் யுவதிகள் விசேட தொலைபேசி இலக்கம் (ஹொட்லைன்) அறிமுகப்படுத்தினால் அனைத்து தகவல்களையும் இரகசியமாக கூற தயாராக உள்ளனர்.

> **எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் தயாராக உள்ளனர்**

வேலை பறிபோகும் என்ற அச்சத்தில் சில ஊழியர்கள் இது குறித்து முறைப்பாடு செய்யக்கூட அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வீட்டு பராமரிப்புத் துறையில் இளம் பெண்களுக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் தயாராக உள்ளனர்.

# முன்னாள் தவிசாளர் மீது தாக்குதல் முயற்சி

■ எம்.றொசாந்த்

காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் மீது திங்கட்கிழமை தாக்குதல் முயற்சி (31) மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர் ஆலயடி சந்தியில் பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக மீன் சந்தைக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படுவதாக கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் பிரதேச சபை செயலாளருக்கும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் க.பாலச்சந்திரன் முறைப்பாடு செய்துள்ளார்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் குறித்த பகுதிக்கு அவரே நேரடியாக சென்றார். இதன்போதே அவர் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திலும் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# “வாழ்வாதாரத்தை சிதைக்கும் நோக்கோடு அரசு செயற்படுகிறது”

வாழ்வாதாரத்தை சிதைக்கும் நோக்கோடு அரசு செயற்பட்டு வருகிறது என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

மகாவலி என்னும் பெயரில் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து களவிஜயம் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அக்கரவெளி எனும் பகுதி அதற்கு அருகில் மணற்கேணி என்ற இடம் அப்பகுதியிலும் காணிகள் அபகரிப்பு நடைபெறுவதாக ஏற்கெனவே சுட்டிகாட்டியிருந்தோம்.

தற்போது அக்கரவெளி பகுதியில் தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட பூர்வீக காணிகளை மக்கள் சென்று பார்த்த போது வன இலாகாவினுடைய பொறுப்பில் இருந்த காணிகள் மகாவலிக்கு விடுவித்து கொடுத்திருக்கிறார்கள்.

11 சிங்கள மக்களுக்கு தலா 25 ஏக்கர் படி வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி போன்ற ஆறு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஏற்கனவே மகாவலி எல் திணைக்களமானது, மக்களிடம் எத்தனை ஏக்கர் இருந்தாலும் இரண்டு ஏக்கர் வீதம் தான் தரமுடியும் என கூறிய போது தங்களுடைய காணிகள் தங்களுக்கே வேண்டும் என விட்டுக் கொடுக்காது இருந்தார்கள்.

இவ்வாறு இருக்கும் போது தமிழர்களுடைய பூர்வீக காணிகள், வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட காணிகள் எங்களுக்கோ, மாவட்ட செயலகத்திற்கோ , பிரதேச செயலகத்திற்கோ தெரியாமல் மகாவலி எல் என்ற அதிகார சபையின் ஊடாக கொழும்பில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாயின் இதனை யாரிடம் முறையிடுவது என்றும் கேள்வியெழுப்பினார்.



# சரளமாக பேசி கறந்தவர் கைது

இந்திய பிரஜை போல் நடித்து நாடு முழுவதும் பல கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்து வந்தவர் கண்டி தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் உள்ள பிரதான ஹோட்டல் ஒன்றில் (Casamara) இரண்டு நாட்களாக தங்கியிருந்து கட்டணத்தை செலுத்தாமல் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பிலான முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபரை கண்டி தலைமையக காவல்துறையின் சுற்றுலாப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

அதில், அவர் இலங்கையைச் சேர்ந்த தமிழர் என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக கண்டி தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கண்டல் தாவரங்கள் நடுகை ஆரம்பம்



■ எம்.எஸ்.எம்.ஹனீபா

சர்வதேச கண்டல் தினத்தையொட்டி அக்கரைப்பற்று வட்டார வன இலாகா காரியாலயத்தினால், அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றை அண்டிய பிரதேசங்களில் கண்டல் தாவரங்கள் நடும் வைபவம் செவ்வாய்கிழமை (01) நடைபெற்றது.

அக்கரைப்பற்று வன இலாகா பிராந்திய வன அதிகாரி ஏ.எல்.இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கோணாவத்தை ஆற்றை அழகு படுத்தும் நோக்கில் இரு மருங்கிலும் கண்டல் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.

“எமது நாட்டைப் பொறுத்த வரை மக்கள் இயற்கையை மிகவும் மோசமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார்கள். இதனால் நாம் நாளாந்தம் பல்வேறு இயற்கை அனர்த்தங்களை எதிர் கொண்டவர்களாக இருக்கின்றோம். சூழலை பாதுகாப்பது ஒரு நாட்டில் வாழும் பிரஜையின் கடமையாகும். எமது நாட்டின் சூழலை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு நாம் ஒவ்வொருவரும் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்” என்று இல்யாஸ் கருத்து தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் சட்டவிரோத காடழிப்பு, சமூக விரோத செயல்கள் என்பன அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. இதனை தடுப்பதற்கு நாம் எல்லோரும் ஒன்றினைந்து செயற்பட வேண்டுமென்றார்.

# கோவில் திருடனை பிடித்து இழுத்த ‘கிவ்’

■ ஆரியவன்ச

பதுளை லுணுகல கதிரவேலாயுதம் கோவிலில் உள்ள தெய்வச் சிலையொன்றில் 4 தங்க நாணயங்கள் மற்றும் கோவில் உண்டியலை திருடிய குற்றச்சாட்டின் கீழ் இந்த ஆலயத்தின் காவலாளி திங்கட்கிழமை (31) கைது செய்யப்பட்டதாக லுணுகல பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றையதினம் காலை பூஜைக்காக ஆலயத்தின் கதவை திறந்து பார்த்த போது, தங்க நாணங்கள் மற்றும் உண்டியல் இல்லாததைக் கண்டு ஆலயக் காப்பாளர், லுணுகல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் விசாரணைகளுக்காக பதுளை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கிவ் என்ற உத்தியோகபூர்வ பொலிஸ் நாயின் உதவியையும் பெற்றுள்ளனர்.

சிலை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இருந்து ஓடிய கிவ் பொலிஸ் நாய், பின்னர், காவலாளி தங்கியிருந்த வீட்டிற்குள் புகுந்தது. அவ்வீட்டைச் சோதனையிட்டபோது, கோயிலில் இருந்து திருடப்பட்ட சில்லறைகள் சிலவும், இரண்டு தங்க நாணயங்களும் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மீன்பிடி படகுக்கு தீ வைப்பு



■ தீஷான் அஹமட்

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இலங்கை துறைமுகத்துவாரம் பகுதியில் செவ்வாய்கிழமை (01) அதிகாலை மீன்பிடி படகு ஒன்று இனம் தெரியாத நபர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது என ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த மீன்பிடி படகே இவ்வாறு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் மூலம் படகின் உரிமையாளருக்கு பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“ இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# வீதியின் குறுக்காக நின்றுகொண்டலொறி

■ டி.சந்ரு, திவாகர்

லாப் சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிவந்த லொறியொன்றின் இயந்திரம் பழுதடைந்ததையடுத்து, அந்த லொறி வீதியின் குறுக்காக நின்றுக்கொண்டதால், ஏனைய சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

நுவரெலியா பிரதான நகருக்கு சிலிண்டர்களை ஏற்றிவந்த லொறியே நுவரெலியா உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் பழுதடைந்து நின்றுக்கொண்டது.

இந்த பிரதான வீதியில் வந்த வாகனங்கள் இருபுறங்களிலும் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன. இதன் காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. லொறி பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.



# மதத்தின் மூலமாக குழப்பங்கள் ஏற்படுத்தப்படாமல் வழிநடத்தவும்

## மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியத்தின் போதகர் சாரங்கபாணி

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

எதிர்காலத்தில் மதத்தின் மூலமாக குழப்பம் ஏற்படுத்தப்படாமல் இருக்க புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள் இணைந்து மக்களை சமாதானமாக வழிநடத்த வேண்டும் என மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியத்தின் ஸ்தாபகரும் போதகரும் சுவிசேஷகருமான சகோ. ஜெயம் சாரங்கபாணி தெரிவித்தார்.

கிழக்கு ஊடக மன்றத்தில், ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு வாழும் 4 இன மக்களும் 3 மொழிகளை பேசுகின்றோம். சிங்கள மக்கள் இந் நாட்டைத் தாமே ஆள விரும்புகின்றார்கள். அவர்களுடன் நாம் ஒன்றிணைந்து வாழ பிரார்த்திக்கின்றோம்.

இஸ்லாமிய மக்களும் எம் சகோதரர்களே. நாங்கள் இஸ்லாமியர்களை நம்புகின்றோம். இஸ்லாமியர்களும் எம்மை நம்ப வேண்டும். அதே போன்று சிங்கள மக்களும் எங்களோடு பணி செய்ய வேண்டும். நாங்கள் பிரிந்து வாழ விரும்பவில்லை. அனைவரும் சகோதரர்களாக இருந்தால் இலங்கை கட்டியெழுப்பப்படும். மட்டக்களப்பு மாவட்டத்திலே மூவின மக்களும் புட்டும் தேங்காய்ப் பூவும் போல இணைந்து வாழ்கின்றார்கள் என்றார்.

இதற்காகவே இறைவனுடைய தூதை நாங்கள் கொண்டு வருகின்றோம். இறைவல்லமையுடன் இந்த தேசம் கட்டமைக்கப்பட வேண்டும். விசேடமாக மட்டக்களப்பை கடவுள் ஆசீர்வதிக்க இருக்கின்றார்.



# முதிரை மரப்பலகையுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில் மரப்பலகைகள் இருப்பது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து விசேட அதிரடிப்படையினரால் செவ்வாய்க்கிழமை (01) சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல இலட்ச ரூபாய் பெறுமதியான முதிரை பலகைகள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தபடவுள்ளதுடன் தடையப்பொருட்கள் நீதிமன்றில் புதன்கிழமை (02) ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.


## 24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

### விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

### விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.**

**அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.**

# நம்பிக்கை தகர்ப்பும், தேர்தலுக்கான சுறுசுறுப்பும்

அரசியல் காய் நகர்த்தல்கள் எல்லாம் தேர்தல் ஒன்றை நோக்கியதாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் ஒரு தேர்தல், 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவேண்டும். அதற்காக கட்சிகள் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் குறித்து எவ்விதமான கதையும் இல்லை. இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று திரும்பியதன் பின்னர், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பல்வேறான கருத்துகள் பொதுவெளியில் அள்ளி வீசப்படுகின்றன.

இதற்கிடையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கும் இடையிலான சந்திப்பு, செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களை, வெள்ளியன்று (04) பாக்லே சந்திக்கவுள்ளார். இவற்றுக்கெல்லாம் முன்னதாக சர்வகட்சி கூட்டமொன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடத்தப்பட்டது.

இவ்விரண்டு சந்திப்புகளிலும் மேலே குறிப்பிட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இந்த திருத்தம் தொடர்பிலான சாதக பாதகங்களையும் இணை சட்டமூலங்கள் குறித்து, அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காய்நகர்த்தல் தேர்தலை ஒன்றை நோக்கியதாக உள்ளதென கருத்து கணிப்பின் ஊடாக அறியமுடிகின்றது. எனினும், பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலாக இருக்காது என்றும், ஜனாதிபதி தேர்தலே நடைபெறும் என்றும் ஊகிக்க முடிகிறது.

கடந்த பொதுத்தேர்தலில், தங்களுக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கு பிரவேசித்து ஜனாதிபதியானவர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் ஆணையின்றியே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இல்லை, மக்களின் ஆணையூடாகவே தான் தெரிவு செய்யப்பட்டவர் என்பதை நிரூபிக்கும் வகையிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கான காய்களை ரணில் நகர்த்திக்கொண்டிருக்கின்றார்.

ஏனைய தேர்தல்களை நடத்தினால், ஐக்கிய தேசியக் கட்சியை தவிர இதர கட்சிகள் கூடுதலான ஆசனங்களை வென்றுவிடும். அது, ஜனாதிபதித் தேர்தலில் பாரிய நெருக்குவாரங்களைக் கொடுக்கும் என்பதால், சிறிய சிறிய தேர்தல்களை நடத்தி அரசியல் களத்தை சுரண்டி பார்க்காமல், ஜனாதிபதி தேர்தலுக்கு குறி வைக்கப்படுகின்றது.

பொருளாதாரம் கொஞ்சம், கொஞ்சமாக தலைத்தூக்கியதால் சந்தோஷமடைந்திருந்த மக்களின் முகங்கள் மீண்டும் சுருங்க தொடங்கிவிட்டன. நாடு கட்டியெழுப்பப்படும் என்ற நம்பிக்கை தகர்க்கப்படுகின்றது. எனினும், தேர்தலுக்கான காய் நகர்த்தல் மட்டுமே சுறுசுறுப்பாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதே உண்மையாகும்.

மக்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதார பெருஞ்சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின், அடுத்தடுத்த தேர்தல்களில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்பதை ஞாபகத்தில் கொள்வது அவசியமானது.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




எம்.எஸ்.எம். ஐயூப்

# 13 ஆவது திருத்தமும் தேர்தல் கனவுகளும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த ஜூலை 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது இந்தியத் தலைவர்கள் இலங்கையின் மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்றும் அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக அமுலாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கடந்த 20 ஆம் திகதி புதுடெல்லியில் ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் நடத்திய கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டின் போது உரையாற்றிய மோடி இலங்கை அரசாங்கம் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்றும் சமத்துவம், நீதி மற்றும் சமாதானம் ஆகியவற்றுக்கான நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்லும் என்றும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான தமது அர்ப்பணிப்பை நிறைவேற்றும் என்றும் நாம் எதிர்ப்பார்கிறோம் என்று கூறினார்.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. கடந்த சுமார் மூன்று தசாப்தங்களாக இந்திய தலைவர்கள் இலங்கைக்கு வந்த போதும் இலங்கைத் தலைவர்கள் இந்தியவுக்குச் சென்ற போதும் இந்தியத் தலைவர்கள் ஏதோ சமயச் சடங்கொன்றைப் போல் இதனை வலியுறத்தி வந்தார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர்ந்த ஏனைய இலங்கைத் தலைவர்களும் அப்போதெல்லாம் தலையை அசைத்துவிட்டு வந்தார்கள்;.

2019 அம் ஆண்டு தமது இந்திய விஜயத்தின் போது தமக்கு அதிகார பகிர்வின் மீது நம்பிக்கை இல்லை என்று இந்திய ஊடகங்களுக்கு கோட்டா மட்டும் கூறிவிட்டு வந்தார். ஏனைய தலைவர்கள் தலையை அசைத்துவிட்டு வந்தாலும் கோட்டாவைப் போலவே நாடு திரும்பியதன் பின்னர் அந்த விடயத்தில் எதனையும் செய்யவில்லை. ரணில் எதையாவது செய்வாரா?

ரணிலும் எதையும் செய்யப் போவதில்லை என்பதே எமது எதிர்வு கூறலாகும்.

இதற்காக இரண்டு முக்கிய காரணங்கள் இருப்பதாக நாம் கருதுகிறோம். முதலாவதாக ரணிலும் இனப் பிரச்சினை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகிய சகலவற்றையும் நாட்டு நலனையன்றி சில தனிப்பட்ட அரசியல் குறிக் கொள்களை முன்னிறுத்தியே கையாள்கிறார். அந்த அடிப்படையில் தமது சொந்த அரசியல் குறிக்கோள்களை பொருட்படுத்தாது பெரும்பான்மை எதிர்ப்புக்களை சமாளித்து இனப் பிரச்சினைக்கு புதிய தீர்வொன்றை தேடவோ அல்லது நாட்டின் சட்டமாகிய அரசியலமைப்பு சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தை பூரணமாக அமுலாக்கவோ அவர் ஒருபோதும் நடவடிக்கை எடுப்பார் என்று நம்ப முடியாது.

இந்த விடயத்தில் அவரது நேர்மையை கடந்த சுமார் ஒன்பது மாதங்களில் மக்கள் கண்டுவிட்டார்கள். இதனை நாம் கடந்த வாரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளில் சுட்டிக் காட்டினோம். பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதாக நவம்பர் மாதம் கூறினார். பின்னர் 13 ஆவது திருத்தத்தை இரண்டு வருடங்களில் பூரணமாக அமுலாக்குவதாக தைப் பொங்கல் அன்று கூறினார். மீண்டும் இனப் பிரச்சினைக்கு இந்த வருடத்துக்குள் தீர்வொன்றை காண்பதாக மே தினக் கூட்டத்தில் கூறினார். மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்காமல் 13 ஆவது திருத்ததை பூரணமாக அமுலாக்குவதாக ஜூலை 19 ஆம் திகதி கூறினார். அதே திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவது தொடர்பாக ஜூலை 26 ஆம் திகதி சர்வகட்சி மாநாடொன்றை கூட்டினார். அந்த மாநாடும் எந்தவித முடிவுமின்றி முடிவுற்றது. அடுத்த நடவடிக்கை என்ன என்று ஒருவருக்கும் தெரியாது.

இரண்டாவதாக, இந்தியா அல்ல, எவர் கூறினாலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலையிலேயே ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியும் இருக்கின்றன. கடந்த வருடம் நாடு எதிர்நோக்கிய பயங்கர பொருளாதார நெருக்கடியின் காரணமாக அவ்விரண்டு கட்சிகள் தொடர்பாகவும் பொதுமக்களின் அபிப்பிராயம் மிகவும் மோசமாகவே கடந்த மார்ச் மாதம் வரை இருந்தது. மார்ச் மாதத்துக்குப் பின்னர் அக்கட்சிகள் மீதும் அரசாங்கத்தின் மீதும் மீண்டும் சிறிதளவு நம்பிக்கை மட்டுமே மக்கள் மத்தியில் வளர்ந்துள்ளதாக வெரிடே ரிசேர்ச் போன்ற நம்பகமான நிறுவனங்கள் நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் காட்டுகின்றன.

எனவே, பொதுஜன முன்னணியும் ரணிலின் ஐ.தே.க.வும் எந்தவித தேர்தலையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சந்திக்க அச்சப்படுகின்றன. உயர் நீதிமன்ற உத்தரவொன்றையும் மீறி மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கு நிதி அமைச்சர் என்ற வகையில் ரணில், நிதி வழங்க மறுத்து வருவதற்குக் காரணமும் அதுவேயாகும். எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வரும் என்று நம்ப முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றால் மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூடுதலான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றிக் கொள்ளும் என்றே அண்மைக்கால அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் மூலம் தெரிய வந்தது. இந்நிலையில் மாகாண சபைத் தேர்தல் நடந்தாலும் பெரும்பாலும் அதே முடிவைக் காணலாம், எனவே, ரணில் மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவார் என்று நம்ப முடியாது.

ஆனால், பாராளுளுமன்றத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ விரைவில் நடைபெற்றால் நிலைமை சற்று மாறலாம். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்றால் அதில் ரணிலும் போட்டியிட்டால் ரணிலின் ஆளுமையோடு சரிசமமாக போட்டியிடக் கூடிய எவரும் இல்லை என்றதோர் அபிப்பிராயம் நிலவுகிறது அதன் காரணமாக தாம் வெற்றி பெறலாம் என ரணில் நினைக்கிறார் போலும்.

எனினும் சட்டப்படி அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது. ஜனாதிபதி ஒருவர் பதவிக்கு வந்து நான்கு ஆண்டுகளில் மீண்டும் ஒரு முறை மக்கள் ஆணையை கோரலாம் என்று அரசியலமைப்பில் கூறப்படுகிறது. ஆயினும் ஒரு ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் மிகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு அவ்வாறு இடைக்கால தேர்தலை நடத்த உரிமை இல்லை என்று அரசியலமைப்பு தெளிவாக எடுத்துக் கூறுகிறது. எனவே, ரணில் அடுத்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை காத்திருக்க வேண்டும்.

இந்த நிலையில் விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணிலுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அரசியலமைப்பை திருத்த வேண்டும் என்று ரணிலை ஆதரிக்கும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் கருதுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் அரசியலமைப்புக்களும் அதன் திருத்தங்களும் ஏனைய பல சட்டங்களும் நாட்டு நலனை கருத்தில் கொள்ளாது தனி நபர்களினதும் அரசியல் கட்சிகளினதும் தேவைக்காகவே நிவைவேற்றப்பட்டுள்ளன. ஆகவே இந்தச் செய்திகளிலும் சிலவேளை உண்மை இருக்கலாம்.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னமும் மீளவில்லை. பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தாது, இறக்குமதிகளை குறைத்து வெளிநாட்டு செலாவணியை ஓரளவு சேமித்து டொலரின் விலை ஏற்றத்தை தடுத்து வைத்துக் கொண்டாலும், அவ்வாறு சேமித்த வெளிநாட்டு செலாவணியால் எண்ணெய் இறக்குமதி செய்து எண்ணெய் தட்டுப்பாட்டை சமாளித்துக் கொண்டாலும், உலக வங்கி வழங்கிய 70 மில்லியன் டொலர் கடனில் எரிவாயு இறக்குமதி செய்து அப்பணபத்தை சுழற்சி செய்து எரிவாயுவை தொடர்ந்து மக்களுக்கு வழங்கி வந்தாலும், அவற்றின் மூலம் மக்கள் எரி பொருளுக்கும் எரி வாயுவுக்கும் நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருப்பபதை நிறுத்த முடிந்த போதிலும், பிரச்சினை தீரவில்லை, தீர்ந்தது என்றதொரு தோற்றத்தை உருவாக்க அதன் மூலம் அரசாங்கத்தால் முடிந்துள்ளது என்பது உண்மையாகும்.

இதனாலேயே கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் மக்கள் அபிப்பிராயம் சற்று மாற்றமடைந்துள்ளதாக வெரிடே ரிசேர்ச் போன்ற நிறுவனங்கள் கூறுகின்றன. ஆனால், இப்போது மீண்டும் பொருளாதாரத்தில் ஒரு தேக்க நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலை நீடித்தால் மக்கள் அபிப்பிராயம் மீண்டும் கடந்த மார்ச் மாதத்தில் இருந்த நிலைக்கு திரும்பலாம். எனவே தான் ரணிலின் ஆதரவாளர்கள் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த வேண்;டும் என்றும் அதனையும் விரைவில் நடத்த வேண்டும் என்றும் கருதுகிறார்கள். அதாவது ரணிலின் பொருளாதார திட்டத்தின் மீது அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்குமே நம்பிக்கை இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை உபயோகிகக ரணில் முயல்கிறார் போல்தான் தெரிகிறது. எனினும் அதன் மூலம் அவர் தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இரு சாராரையும் பகைத்துக் கொள்ளப் போகிறார் என்பது இப்போது தெளிவாக தெரிகிறது. அதன் மூலம் சில எதிர்க்கட்சிகளிடையே பகைமையை உருவாக்கும் அவரது நோக்கமென்றால் சிலவேளை நிறைவேறலாம்.

முக்கிய பிரச்சினை என்னவென்றால் ஜனாதிபதித் தேர்தலை நாளை நடத்தினாலும் ஐதேகவுக்கு யார் வாக்களிக்கப் போகிறார்கள் என்பதேயாகும். கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க ஒரு மாவட்டத்திலும் ஓர் ஆசனத்தையேனும் பெறவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிதாக ரணிலுக்கு வாக்களிப்பதாக இருந்தால் ஒன்றில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் அல்லது பொதுஜன முன்னணின் ஆதரவாளர்களாகத் தான் இருக்க வேண்டும். சஜித்தும் பொதுஜன முன்னணியின் வேட்பாளர் ஒருவரும் போட்டியிட்டால் ரணிலுக்கு வாக்களிக்கப் போவது யார்?



## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளியில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் தருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி,அலாதியானது பொது நலத்தொண்டுகளில் இளம் தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளை தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தை குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

## மக்களே அவதானம்

திருக்கோவில் பிரதேசத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட பாரிய கடலரிப்பை கட்டுப்படுத்துமுகமாக பாரிய கருங்கற்கள் போடப்பட்டுள்ளன.

குறிப்பாக திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் முன்புறம் உள்ள கடற்கரைப் பகுதியில் இக் கருங்கற்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் போடப்பட்டுள்ளன.

இதேவேளை ஆலய வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தற்போது திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஒகஸ்ட் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது.

திருவிழாவிற்கு செல்வோர் குழந்தைகளை கடற்கரை பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டாமென ஆலய நிர்வாகமும் பொலிஸாரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக தீர்த்தம் ஆடும் வேளையில் மிகவும் அவதானமாக கவனத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். மீறினால் ஆபத்தை சந்திக்க வேண்டி நேரிடும் என்று எச்சரிக்கை இடப்பட்டுள்ளது

– வி.ரி.சகாதேவராஜா






# அமைச்சரவை முடிவுகள் சில

## வினைத்திறனாக்கலும் முறைமைப்படுத்தலும்

திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமித்தல் கோரளைப்பற்று அடிப்படையில், நகரப் பிரிவு மட்டத்திலும், மருத்துவமனை மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதால், குறித்த அதிகாரபரப்பினுள் எல்லைகளை திட்டவட்டமாக அறிந்து கொள்வதற்கு இயலாமையால், திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது பொதுமக்களுக்குப் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அத்துடன், நீண்டகாலமாக திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான நியமனம் வழங்கப்படாமை, ஒருசில மாவட்டங்களில் அதிக வெற்றிடங்கள் காணப்படுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனானதும், முறைசார்ந்த வகையிலான சேவைகளை வழங்கும் நோக்கில் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கான தகைமைகள், அவர்களின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் உள்ளடங்கிய ஏற்பாடுகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு கடமை நிரந்தர செயன்முறைக் கோவையொன்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த பணிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தற்போது நியமிக்கப்பட்டுள்ள அனைத்து திடீர் மரண விசாரணை அதிகாரிகளும் பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அடையாளங் காணப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு இணைப்புச் செய்வதற்கும், இருமொழிப் பயன்பாட்டு பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக இருமொழி திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கும், தொடர்ந்து நிலவுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காகவும் இவ்வமைச்சு திட்டமிட்டுள்ள தொடர் வேலைத்திட்டங்களை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார். குறித்த வேலைத்திட்டத்திற்கு அமைச்சரவையின் உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்

கிங்கங்கை நீரால் தொடர்ந்து மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கு நிரந்தர தீர்வொன்றை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான சாத்தியவளக் கற்கையை மேற்கொள்வதற்காக ஆஊஊஊ ￼ ஞ்ழொலனசழ ஊழறஎழசவரைஅ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி போன்ற பதவிகளை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக நியமிப்பதற்கு இயலுமாகும் வகையில் 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## விமானங்களுக்கான சேவைகளைப் பெறல்

ஸ்ரீலங்கன் விமான கம்பனியால் இந்தியாவின் கொச்சி மற்றும் இந்தோனிசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் விமானப் பயணிகள் மற்றும் நடமாடும் விமான மின்னுயர்த்தி மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கல்கள் போன்ற பிரிவுகளுக்காக சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்கான விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கல் ஒப்பந்தத்தை யுஐ யுசிழசவ ளுநசஎiஉநள டுஅவைநன இற்கும், ஜகார்த்தா சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கும் ஒப்பந்தம் Pவு. புயிரசய யுபெமயளய இற்கும் வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்தின் கீழ் துரிதமாக நன்மைகளை செலுத்துவதற்கு ஏற்புடைய வகையில் கௌரவ ஜனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

# நலன்புரி நன்மைகள் சபையால் அஸ்வெசும வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றில் பயனாளிகள் 1,792,265 பேரைத் தெரிவு செய்துள்ளடன், அவர்களில் மேன்முறையீடு அல்லது ஆட்சேபனை கிடைக்கப் பெறாத பயனாளிகள் 1,588,835 பேருக்காக கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

# பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, ஆனாலும் மேற்படி வகைகளில் உள்ளடக்கப்படுவதற்காக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ள பயனாளிகள் 84,374 பேருக்கு அவர்களுடைய மேன்முறையீடுகளை மீளாய்வு செய்து இறுதித் தீர்மானத்தை வழங்கும் வரைக்கும் அவர்கள் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள வகைக்குரிய நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல.;

# தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் 119,056 பேருக்கு எதிராக ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த ஆட்சேபனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுச் செயன்முறை நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்குரிய நன்மைகளை செலுத்துதல்.

# வேலைத்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளுக்காக விண்ணப்பித்து, ஆனாலும் தெரிவு செய்யப்படாத, தற்போது சமுர்த்தி நலன்புரி நன்மைகளைப் பெறுகின்ற 393,097 பேருக்கு அஸ்வெசும வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேபனை மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை முழுமையாக நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல்

# தற்போது சிறுநீரக உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பயனாளிகளுக்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக தொடர்ந்தும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் முதியோருக்கான உதவிக் கொடுப்பனவுகளை அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக தொடர்ந்தும் வழங்குதல்.

# பராமரிப்பு இல்லங்கள் அல்லது வணக்கத்தலங்களிலுள்ள சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இயலாமையுடன் கூடிய நபர்கள் அல்லது முதியோர்கள் 11,660 பேருக்கு குறித்த உதவிக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் செலுத்துதல்.

# கனவை தகர்க்கும் தூண்கள்



சு.திலேஜா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

“ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா” என இன்றைய சமுதாயத்தை இன் முகத்தோடு அழைத்தார். பாரதி, இன்றைய இளைஞர் சமுதாயம் ஏற்றத்தையும் மார்த்தத்தையும் நோக்கி மகத்தான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இளைஞர்கள் எனப்படுவோர் ஒரு நாட்டினுடைய ஆணிவேராக காணப்படுகின்றனர். “விளையும் பயிரை முளையிலேயே தெரியும்”என்ற பழமொழி ஆனது ஓர் இளைஞன் நாட்டினுடைய வளர்ச்சிக்கு எவ்வாறு பங்காற்றுவான் என்பது அதனுடைய சிறு பராயத்திலே அறிந்து கொள்ளலாம் என்பதை விவரிக்கின்றது. இளைஞர்கள் எனப்படுவோர் 18-25 வயதுக்கு உட்பட்டவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையானது வரையறை செய்கிறது.

தற்காலத்தில் இளைஞர்கள் பல்வேறு வகையான சவால்களை தம்முடைய வாழ்க்கையில் அன்றாடம் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான சவால்கள் அவர்களின் வாழ்க்கையை திசை திருப்பும் பக்கங்களாகவும் காணப்படுகின்றன. அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை, கைத்தொலைபேசி பாவனை, தற்கொலை ,காதல் தோல்வி, வீதி விபத்துக்கள் ,பாலியல் துஷ்பிரயோகம், ஜாதி, மத ,இனம் சார் பாகுபாடு பிரச்சனைகள், வெளிநாட்டு மோகம் என்பன அவர்கள் இன்றைய காலகட்டத்தில் எதிர் நோக்குகின்ற பாரிய பிரச்சனையாக காணப்படுகிறது. இலங்கையில் மட்டுமின்றி உலக நாடுகளிலும் இவ்வாறான சில பிரச்சனைகள் நிலவி வருகின்றன. இதுவே இன்றைய இளைஞர்களின் போக்காக காணப்படுகின்றது.

ஒவ்வொரு சமூகத்திலும்

> **“இன்றைய இளைஞர்கள் அவர்களின் கனவை மட்டும் அல்ல, அவர்களின் பெற்றோர்களின் கனவையும் சேர்த்து தொலைக்கின்றனர். அவற்றை மனதில் கொண்டு இலக்கு இன்றி பயணம் செய்வதை இளைஞர்கள் கைவிடுத்து, அவர்கள் கனவையும் அவர்களின் பெற்றோர்களின் கனவையும் நினைவாக்க பாடுபட வேண்டியது ஒவ்வொரு இளைஞர்களினதும் கடமையாகும்**

> **“குறிப்பாக தற்காலத்தில் அனைத்து இளைஞர்களும் அலைபேசி பாவனைக்கு அடிமையாவதால் சமூக சீரழிவுகள் ஏற்படுகின்றன. அலைபேசியில் ஆபாச வீடியோக்கள் பார்த்தல், அலைபேசியால் ஏற்படும் காதல் வலைவீச்சுக்கள், Online games என்பனவும் இளைஞர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்கிறது. குறிப்பாக தற்காலத்தில் அனைத்து இளைஞர்களும் செல்போன் பாவனைக்கு அடிமையாவதாலும் சமூக சீரழிவுகள் ஏற்பட காரணமாகின்றன**

காணப்படுகின்ற ஒவ்வொரு குடும்பங்களும் இவ்வாறான பிரச்சனைகளை முகம் கொடுத்து வருகின்றனர். இளைஞர் அதிகமாக போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் இளமையில் அவர்கள் வழி தவறிச் செல்ல நேரிடும் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. ஐஸ் போதைப்பொருளை தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பரவி காணப்படுகிறது.

ஐஸ் போதைப் பொருள்கள் நமது உடலில் சொல்லுவதனால் உடலில் பல புதிய நோய்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அவற்றோடு மனநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக ஆராய்ச்சியில் தெரிய வந்தாக சிறப்பு மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறனர்.

அது மட்டுமன்றி அதிகளவு போதைப் பொருட்களை பயன்படுத்தி விட்டு அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டுவதனால் அதிகளவு வீதி விபத்துக்களை எதிர் நோக்குவதோடு உயிரிழப்புக்களையும் இளைய சமுதாயமே அதிகமாக எதிர்கொண்டு வருகின்றது. 2022 தரவுகளின் படி நாட்டில் 5 இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக தற்காலத்தில் அனைத்து இளைஞர்களும் அலைபேசி பாவனைக்கு அடிமையாவதால் சமூக சீரழிவுகள் ஏற்படுகின்றன. அலைபேசியில் ஆபாச வீடியோக்கள் பார்த்தல், அலைபேசியால் ஏற்படும் காதல் வலைவீச்சுக்கள், *Online games* என்பனவும் இளைஞர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்கிறது.

குறிப்பாக தற்காலத்தில் அனைத்து இளைஞர்களும் செல்போன் பாவனைக்கு அடிமையாவதாலும் சமூக சீரழிவுகள் ஏற்பட காரணமாகின்றன. அலைபேசிகளில் தவறான காணொளிகளை பார்த்தல், அலைபேசி தொடர்பாடல் ஏற்படும் காதல், திருமணம் என்பனவும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று காணப்படுகின்றது.

மேலும் நோக்குகையில் இன்றைய சமுதாயத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல் என்பது இளைஞர்கள் மத்தியில் ஒரு சாதாரண விடயம் ஆகிவிட்டது. தமக்கு ஏற்படும் தோல்விகளை திடமாக தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் காணப்படுகின்றனர். பொதுவாக காதல் தோல்வி ஏற்படும் போது இளைஞர்கள் தம்முடைய தீர்வாக தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதலை தெரிவு செய்து கொள்கின்றனர். அத்தோடு தமது வாழ்க்கை பயணத்தை முடித்துக் கொள்ள எண்ணுகின்றனர். தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல் என்பது பிரச்சனைகளுக்கு தீர்வு அல்ல என்பதை ஒவ்வொரு இளைஞர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது ஆணித்தரமான பதிலாக காணப்படுகின்றது.

> **“ஓர் இளைஞன் நாட்டினுடைய வளர்ச்சிக்கு எவ்வாறு பங்காற்றுவான் என்பது அதனுடைய சிறு பராயத்திலே அறிந்து கொள்ளலாம் என்பதை விவரிக்கின்றது. இளைஞர்கள் எனப்படுவோர் 18-25 வயதுக்கு உட்பட்டவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையானது வரையறை செய்கிறது**

நவநாகரீக உலகில் இளைஞர்களிடையில் பாலியல் துஷ்பிரயோகம் என்பது அதிகரித்து வருகின்றது. குறிப்பாக இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களை குறிப்பிடலாம்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையை விட்டு வெளியேறும் இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு வரும் இளைஞர்களால் நிரம்பி வழிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய இளைஞர்கள் அவர்களின் கனவை மட்டும் அல்ல, அவர்களின் பெற்றோர்களின் கனவையும் சேர்த்து தொலைக்கின்றனர். அவற்றை மனதில் கொண்டு இலக்கு இன்றி பயணம் செய்வதை இளைஞர்கள் கைவிடுத்து, அவர்கள் கனவையும் அவர்களின் பெற்றோர்களின் கனவையும் நினைவாக்க பாடுபட வேண்டியது ஒவ்வொரு இளைஞர்களினதும் கடமையாகும்.

ஒரு நாட்டினுடைய தூண்களாக காணப்படுகின்ற இளைஞர்களை அவர்களுக்கு எதிரான சவால்களில் இருந்து மீண்டு ஒழுக்கமிக்கவர்களாக வாழ வேண்டும்.



மியன்மார்

# 5 வழக்குகளில் சூகிக்கு மன்னிப்பு

மியன்மாரின் முன்னாள் அரசுத் தலைவர் ஆங் சான் சூகிக்கு 5 வழக்குகளில் இராணுவ ஆட்சியாளர்களால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், அவர் முற்றிலுமாக விடுவிக்கப்படவில்லை எனவும், அவர் மேலும் 14 வழக்குகளை எதிர்கொண்டுள்ளார் எனவும் மியன்மார் அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

78 வதான ஆங் சான் சூகி,1991 ஆம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசை பெற்றவர். 2021 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியையடுத்து, ஆங் சான் சூகி உட்பட ஜனநாயக அரசியல் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.



பல்வேறு வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு மொத்தமாக 33 வருட சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஊழல், சட்டவிரோதமாக வோக்கி டோக்கிகளை வைத்திருந்தமை, கொரோனா கட்டுப்பாடுகளைப் புறக்கணித்தமை முதலானவை தொடரபான குற்றச்சாட்டுகளும் இவற்றில் அடங்கும்.

ஆப்கானிஸ்தான்

## ஆண் துணையின்றி காரில் செல்லக்கூடாது

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அங்குள்ள பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. மாணவிகள் கல்வி கற்கவும் தடைவிதிக்கப்பட்டது.



உடற்பயிற்சி கூடங்கள், பூங்காக்கள், நீச்சல் குளங்கள் உள்ளிட்ட இடங்களுக்கு செல்லவும் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. சமீபத்தில் தலைநகர் காபூல் உள்ளிட்ட மாகாணங்களில் பெண்கள் அழகு நிலையங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டது. இதனால் பெண் தொழிலாளர்கள் வேலை இழந்து தவித்து வருகின்றனர்.

இந் நிலையில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் வெளியில் காரில் செல்லும் போது ஆண் துணை இல்லாமல் செல்லக்கூடாது என்றும் புர்கா உடை கட்டாயம் அணிந்து செல்லவேண்டும் என்றும் தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.



வொஷிங்டன்

## வடகொரியாவுக்கு எதிராக முத்தரப்பு மாநாடு

வடகொரியாவுக்கு எதிராக முத்தரப்பு உச்சி மாநாடு அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் கேம்ப் டேவிட்டில் வருகின்ற 18ஆம் திகதி முத்தரப்பு உச்சிமாநாடு நடைபெற உள்ளது. இதில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளின் உயர்மட்ட அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்காக ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா அமெரிக்கா செல்ல உள்ளார். இதற்கு முன்னதாக கடந்த மே மாதம் ஜப்பானில் நடந்த ஜி7 மாநாட்டின்போது முத்தரப்பு உச்சி மாநாடு நடைபெற்றது. எனினும் சர்வதேச நிகழ்வுகளுக்கு இடையே அல்லாமல் தனியாக நடைபெறும் முதல் உச்சி மாநாடு இதுவாகும். இந்த மாநாட்டில் வடகொரியாவில் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை சமாளிக்க முத்தரப்பு நாடுகளின் ஒத்துழைப்பு, பாதுகாப்பு போன்றவை குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அகற்றப்பட்டது புதிய ‘எக்ஸ்’

ட்விட்டர் நிறுவனத்தின் பெயர் மற்றும் லோகோவானது சமீபத்தில் எக்ஸ் என மாற்றப்பட்டது. அதன் உரிமையாளரான எலான் மஸ்க் ட்விட்டரை தன் வசம் கொண்டுவந்த பிறகு அதன் நீண்டகால சின்னமாக இருந்த நீல நிறப்பறவை நீக்கி எக்ஸ் என மாற்றம் செய்தார்.



இதன்பிறகு, அமெரிக்காவின் சென்.பிரான்ஸிஸ்கோவில் உள்ள ட்விட்டரின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த நீலப்பறவை லோகோ அப்புறப்படுத்தப்பட்டு, புதிய ‘எக்ஸ்’(X) எனும் எழுத்து அலுவலகத்தின் உயரத்தில் வைக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது, நிறுவனம் அந்த எக்ஸ் லோகோவை அகற்றப்பட்டுள்ளது.

இந்த முடிவானது மக்கள் புகாரளித்த நிலையில் எடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. அந்த புகார்களில் அலுவகத்தில் மீது வைக்கப்பட்டுள்ள எக்ஸ் லோகோவில் இருந்து வரும் அதிக தீவிரமான வெள்ளை ஒளி மக்களுக்கு கண்களை பாதிப்பதோடு எரிச்சலை ஏற்படுத்துவதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்த எக்ஸ் அடையாளம் நிலையற்றதாக உள்ளது. ஒரு அழுத்தமான நிலநடுக்கம் ஏற்பட்டால், லோகோ கீழே விழுந்து மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கபட்டுள்ளது. இவ்வாறு எண்ணற்ற புகார்கள் வந்தமையால் நிறுவனம் லோகோவை அகற்றியதாக கூறப்படுகிறது.



## ஓநாய் தோற்றத்துக்கு ரூ.20 லட்சம் செலவு


ஜப்பானை சேர்ந்த யூடியூப்பர் ஒருவர் நாய் போன்ற உடை அணிந்து பூங்காவில் வலம் வந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது.

இந்நிலையில் ஓநாய் போன்ற தோற்றத்தில் ஒருவர் உலா வரும் வீடியோக்கள் தற்போது இணையத்தில் பரவி வருகிறது. டோருஉவேடா என்ற அந்த என்ஜினீயருக்கு சிறு வயது முதலே ஓநாய்கள் மீது அதிக பற்று உண்டாம். எனவே தானும் ஓநாயை போல மாற வேண்டும் என ஆசைப்பட்ட அவர் இந்திய மதிப்பில் ரூ.20 லட்சம் செலவு செய்து ஓநாய் போன்ற தோற்றத்தில் ஆடையை வடிவமைத்து பெற்றுள்ளார்.

கர்நாடகா

## மணப்பெண்ணின் ஆபாசத்தால் கோடிகளை இழந்த பொறியியலாளர்

கர்நாடகாவின் கிருஷ்ணராஜபுரம் பகுதியை சேர்ந்த 41 வயதான ஒரு மென்பொருள் பொறியியலாளர் பிரிட்டனில் வேலை செய்து வந்தார். தொழில்முறை பயிற்சிகளுக்காக பெங்களூருவிற்கு வந்திருந்த அவர் திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்தில் ஒரு திருமண வரன் தேடும் வலைதளத்தில் விவரங்களை பதிவு செய்து பொருத்தமான பெண்ணை தேடிவந்துள்ளார்.



திருமண வலைதளம் மூலம் அவருக்கு ஒரு பெண் அறிமுகமானார். பொறியியலாளரை திருமணம் செய்து கொள்ள சம்மதித்த அந்த பெண் தான் தந்தையில்லாமல் தாயுடன் மட்டும் வாழ்வதாக கூறியுள்ளார்.

தாயின் அவசர மருத்துவ தேவைக்காக ரூ.1500 வேண்டும் என பொறியியலாளரிடம் கேட்டு பெற்று கொண்டார். மீண்டும் ஜூலை 4-ம் திகதி பொறியியலாளருடன் வீடியோ அழைப்பில் தொடர்பு கொண்டு பொறியியலாளரின் ஆசையை தூண்டும் விதமாக ஆடையில்லாமல் தோன்றி, அவருடன் ஆபாசமாக உரையாடியுள்ளார்.

அந்த உரையாடல்களை பொறியியலாளருக்கு தெரியாமல் தனது ஸ்மார்ட்போனில் பதிவு செய்து கொண்டுள்ளார். பிறகு, இந்த பதிவை பொறியியலாளருக்கு அனுப்பி, அவரின் பெற்றோருக்கு அனுப்பாமல் இருக்க வேண்டுமென்றால் ஒரு பெரும் தொகை வேண்டும் என கேட்டு அவரை பிளாக்மெயில் செய்துள்ளார்.

இதனையடுத்து அந்த பொறியியலாளர் ரூ.1 கோடிக்கு மேல் அந்த பெண்ணிற்கு அனுப்பியுள்ளார். மொத்த தொகையில் சுமார் ரூ.30 லட்சம் வரை அப்பெண் ஏற்கெனவே செலவழித்து விட்டதாகவும், மீதம் உள்ள சுமார் ரூ.84 லட்சம் மீட்கும் முயற்சியில் அப்பெண்ணின் வங்கி கணக்கை முடக்கி விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரேன் விழுந்ததில்

## 17 பேர் உயிரிழப்பு

மகாராஷ்டிர மாநிலம் தானே மாவட்டத்தில் சம்ருத்தி பகுதியில் விரைவுச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வந்தபோது இராட்சத கிரேன் நள்ளிரவு 12.30 மணியளவில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) தெரிவித்துள்ளது.

அதில் இருவர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்து உள்ள பிரதமர் மோடி, தலா 2 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியை அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு இந்திய மதிப்பில் தலா 50,000 ரூபாய் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

எல்.பி.எல்:

# பி-லவ் கண்டியை வென்ற கொழும்பு ஸைஸ்ரக்கர்ஸ்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பி-லவ் கண்டியுடனான போட்டியில் கொழும்பு ஸைஸ்ரக்கர்ஸ் வென்றது.




இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸைஸ்ரக்கர்ஸ், பாபர் அஸாமின் 59 (52), நுவனிடு பெர்ணாண்டோவின் 28 (31) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் ஹஸ்னைன் 4-0-27-2, அணித்தலைவர் வனிடு ஹஸரங்க 4-0-22-0, முஜீப் உர் ரஹ்மான் 4-0-28-0, தனுக டப்ரே 2-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கண்டி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களையே பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அஸாம் தெரிவானார்.

இதேவேளை மற்றைய போட்டியில் தம்புள்ள ஓறாவை சுப்பர் ஓவரில் கோல் டைட்டான்ஸ் வென்றது.




## சமநிலையில் முடிந்த ஆஷஸ் தொடர்

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரானது சமநிலையில் முடிவடைந்தது.

ஓவலில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினமிரவு முடிவுக்கு வந்த ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் ஐந்தாவது போட்டியை இங்கிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே 2-2 எனத் தொடர் சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இங்கிலாந்து: 283/10 (துடுப்பாட்டம்: ஹரி ப்ரூக் 85, பென் டக்கெட் 85, கிறிஸ் வோக்ஸ் 36, மொயின் அலி 34, மார்க் வூட் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 4/82, டொட் மேர்பி 2/22, ஜொஷ் ஹேசில்வூட் 2/54, மிற்சல் மார்ஷ் 1/43, பற் கமின்ஸ் 1/66)

அவுஸ்திரேலியா: 295/10 (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் 71, உஸ்மான் கவாஜா 47, பற் கமின்ஸ் 36, டொட் மேர்பி 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 3/61, ஜோ றூட் 2/20, மார்க் வூட் 2/62, ஸ்டூவர்ட் ப்றோட் 2/49, ஜேம்ஸ் அன்டர்சன் 1/67)

இங்கிலாந்து: 395/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 91, ஜொனி பெயார்ஸ்டோ 78, ஸக் குறொலி 73, பென் டக்கெட் 42, பென் ஸ்டோக்ஸ் 42, மொயின் அலி 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 4/100, டொட் மேர்பி 4/110, ஜொஷ் ஹேசில்வூட் 1/67, பற் கமின்ஸ் 1/79)

அவுஸ்திரேலியா: 334/10 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 72, டேவிட் வோர்னர் 60, ஸ்டீவன் ஸ்மித் 54, ட்ரெவிஸ் ஹெட் 43 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 4/50, மொயின் அலி 3/76, ஸ்டூவர்ட் ப்றோட் 2/62, மார்க் வூட் 1/34)

போட்டியின் நாயகன்: கிறிஸ் வோக்ஸ்

இங்கிலாந்தின் தொடரின் நாயகன்: கிறிஸ் வோக்ஸ்

அவுஸ்திரேலியாவின் தொடரின் நாயகன்: மிற்செல் ஸ்டார்க்

## இந்தியாவின் அணித்தலைவராக ஜஸ்பிரிட் பும்ரா




அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாமில் அணித்தலைவராக ஜஸ்பிரிட் பும்ரா மீள்வருகையை மேற்கொண்டுள்ளார்.

இக்குழாமில் பிரசீத் கிருஷ்ணா, ஜிதேஷ் ஷர்மா, ரிங்கு சிங், ஷிவம் டுபே ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: ஜஸ்பிரிட் பும்ரா (அணித்தலைவர்), ருத்துராஜ் கைகவாட் (உப அணித்தலைவர்), யஷஸ்வி ஜைஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங்க், சஞ்சு சாம்ஸன் (விக்கெட் காப்பாளர்), ஜிதேஷ் ஷர்மா (விக்கெட் காப்பாளர்), ஷிவம் டுபே, வொஷிங்டன் சுந்தர், ஷபாஸ் அஹ்மட், ரவி பிஷ்னோய், பிரசீத் கிருஷ்ணா, அர்ஷ்டீப் சிங், முகேஷ் குமார், ஆவேஷ் கான்.

பட்டிருப்பு வலய பாடசாலைகளுக்கு இடையிலான வர்ண உடற்பயிற்சி:

## முதலிடம் பெற்ற விபுலானந்தா



வி.ரி. சகாதேவராஜா

பட்டிருப்பு கல்வி வலயத்தால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வர்ண உடற்பயிற்சிப் போட்டியில் திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலய அணி முதலிடத்தைப் பெற்றது.

போரதீவு பொது விளையாட்டு மைதானத்தில் தரம் - 111 வகைப் பாடசாலைகளுக்கிடையில் இருநூற்று ஐம்பதுக்கு மேல் மாணவர்களைக் கொண்ட பாடசாலை களுக்கு இடையிலேயே இப்போட்டி இடம்பெற்றிருந்தது.

இந்தியாவுக்கெதிரான தொடருக்கான

## மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் ஹோப்



இந்தியாவுக்கெதிரான இருபதுக்கு  20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் ஷே ஹோப் இடம்பெற்றுள்ளார்.

தவிர, ஷிம்ரோன் ஹெட்மயர், வேகப்பந்துவீச்சாளர் ஒஷேன் தோமஸ், நிக்கலஸ் பூரான் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: றொவ்மன் பவல் (அணித்தலைவர்), கைல் மேயர்ஸ் (உப அணித்தலைவர்), ஜோன்சன் சார்ள்ஸ், றொஸ்டன் சேஸ், ஷிம்ரோன் ஹெட்மயர், ஜேஸன் ஹோல்டர், ஷே ஹோப், அகீல் ஹொஸைன், அல்ஸாரி ஜோசப், பிரண்டன் கிங்க், ஒபெட் மக்கோய், நிக்கலஸ் பூரான், றொமாரியோ ஷெப்பர்ட், ஒடியன் ஸ்மித், ஒஷேன் தோமஸ்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 02 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.